பக்கங்கள் நான்கு விலை ரூபா 5.00

முரசு 06 ஒலி 95 பிரசோற்பத்தி மாசி 18 ( 01 . 03 . 1992 ) ஞாயிறு

## வவுனியாப்பகுதியில் கடும் வான் தாக்குதல்

வவுனியாவில் நடைபெறும் வன்னி விக்ரம ராணுவ நடவடிக்கைகளின் போது பரவலாக கடுமையான வான் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன ஈச்சன் குளம், சட்டையாக் குளம், பெரியதம்பனை ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் காலை மோனக்குண்டு வீச்சுக்கள் இடம் பெற்றன இப்பகுதிகளில் உள்ள மக்களின் வீடுகள் பலத்த சேதத்திற்குள்ளாகின.

வவுனியா - மன்னார் வீதியில் குடிமனைகள் மீது படையினர் கடும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர் பேயாடிக்குளம் பகுதியில் ஹெலிக்கப்டர் நடத்திய தாக்குதலால் பல வீடுகள் சேதமாகின.

# ...ாழையடியில் கடற்படை படகு மீது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல்

## ...பாதுகாப்பு அமைச்சு ஒப்புக்கொள்கிறது

தாழையடிப் பகுதியில் நேற்று முன்தினம் காலை கடலில் ...ந்து சென்று கொண்டிருந்த கடற்படைப் படகு ஒன்றின்மீது விடு...லைப் புலிகள் தாக்குதல் தொடுத்ததில் அப்படகு பலத்த சேதமடைந்...

...பாதுகாப்பு அமைச்சும் இதனை ஒப்புக்கொண்டுள்ளது.

...காங்கேசன்துறையிலிருந்து நேற்று முன் தினம் காலை ...பருத்தித்துறை பகுதிக்கு ...டையினர் சென்றுகொண்டி ...ருந்த போதே படகின் மீதான இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

விடுதலைப்புலிகள் இரு அதி...விசைப் படகுகளில் வந்து நவீனரக ஆயுதங்களுடன் தாக்குதல் நடத்தியதாகவும் இரு படையினர் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது 7

## வவுனியாவில் நேற்றும் கனரக வாகனம் சேதம்

...வுனியாவில் நேற்றுக் ...கட்டையக் குளம் ...த்தில் இருந்து ஈச் ...பகுதிக்கு வாகனங் ...த படையினர் மீது ...தாக்குதல் தொடுத் ...தி வைத்து புலிகள் வழிமறித்து நடத்திய ஆர்.பி.ஜி. தாக்குதலின் போது கனரக வாகனம் ஒன்று சேதமடைந்தது

படையினருக்கும் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது 07

...பரவிக்குளம் என்ற இடத்...

## வீரச்சாவு

நேற்று முன்தினம் தாளையடிக் கடலில் ஸ்ரீலங்காப் படையினருடனான நேரடி மோதலில் லெப். சங்கீதன் (வைரமுத்து ஜெயந்திரன் - வாழைச்சேனை), கப்டன். தமிழரசன் / சியாப் (மரமதுரு உதயகுமார் - ...வெட்டித்துறை), 2வது லெப். ஆனந்தன் (அழகன் அண்ணாத்துரை -பருத்தித்துறை), 2வது லெப். சிவலோகநாதன் (வேலாயுதபிள்ளை விக்னேஸ்வரன் தாளையடி) ஆகியோர் வீரச்சாவு அடைந்தனர்

## மாணவர்களின் கல்விக்கு புலிகள் எதிரானவர்கள் அல்லர்

...க. பொ. த உயர் தரப் ...ட்சையில் அதிக புள்ளி ...ற்ற தமிழ் மாணவர்கள் ...திபதியிடம் பரிசில் வாங்...த புலிகள் தடைவிதிக்க...வயா என ஜனாதிபதி ...தாச தம்மிடம் கேட்ட ...அரச அதிபர் மாணிக்க...ர் தெரிவித்தார்

...கலூரியில் ...வரி நூலகத்தை ...ர் திறந்துவைத்து ...னார்

...மாணவர்களின் கல்...ந எதிரானவர்கள் அல்லர் என்று தாம் ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறியதாகவும் அரச அதிபர் இங்கு குறிப்பிட்டார். 15

## காங்கேசன் துறைமுகத்தை செஞ். அதிகாரி பார்வையிடுவார்

காங்கேசன்துறை துறைமுகம் எதிர்வரும் 5 ஆம் அல்லது 6 ஆம் திகதியளவில் பாவனைக்கு திறந்துவிடப்படவுள்ளது குறித்து நேரில் ஆராய சர்வதேச செஞ்சிலுவைச்சங்க உயரதிகாரி ஒருவர் இன்று பலாலிக்கு செல்லவுள்ளார்

பொருள்களை ஏற்றிறக்கும் பாதைகள், பாதுகாப்பு என்பன தொடர்பாக அவர் சம்பந்தப்பட்டவர்களுடன் துறைமுகப்பகுதிக்கும் செல்வார்.

இந்த அதிகாரி ஒருவாரகாலம் பலாலியில் தங்கியிருப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 47, 07

## தெரிவுக்குழுவுக்கு வரமுன் தொண்டமானுடன் பேசவேண்டும்

...பாராளுமன்றத் தெரிவுக் ...முன்பாக விடுதலை புலி...வருவதற்கு முன்னர் ...ச்சர் தொண்டமானு...வர்கள் பேச்சு நடத்த ...வதாக பி. பி. ஸி. ...த்தது

...தொடர்பாக விடு...புலிகள் தொண்ட...க்கு 5 பக்கங்கள் அடங்...ம் ஒன்றை அனுப்பிய...பி. பி. ஸி, மேலும் ...த்தது

...யாழ்ப்பாணத்தில் ...டமானுடன் அவரது யோசனைகள் பற்றி பேச வேண்டும் எனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

## உலகக்கோப்பை கிரிக்கெட்

### அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா தோல்வி

உலகக்கோப்பை கிரிக்கெட் பந்தயத் தொடரில் தென் ஆபிரிக்காவிற்கும் நியூஸிலாந்துக்குமிடையில் அவ்லாண்டில் இடம்பெற்ற ஆட்டத்தில் நியூசிலாந்து அணி 7 விக்கற்றுகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென் ஆபிரிக்க அணி 50 ஓவர்களில் 7 விக்கெற்றுகள் இழப்பிற்கு 190 ஓட்டங்களைப் பெற்றது.

நியூசிலாந்து அணி அதன்

—04 ஆம் பக்கம் பார்க்க

## ...தொண்டமானின் திட்டத்தை ...தரிவுக்குழு முதலில் எடுத்தது

...பிரச்சினைத் தீர்வுக் ...அமைச்சர் தொண்ட...ன் சமரசத்திட்டத்தை ...பாராளுமன்றத் தெரி...குழுவிடம் சமர்ப்பித்...பதாக பி. பி. ஸி. சிங்கள சேவை தெரிவித்தது.

ஏனைய கட்சிகள் சமர்ப்பித்த யோசனைகளைவிட தொண்டமானின் யோசனைகளையே தெரிவுக்குழு முதலில் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கூடுதலாக தொண்டமானின் யோசனைகளையே தெரிவுக்குழு முழுமையாக ஆராயும் எனவும் சிங்கள பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது

## ஜனாதிபதியிடம் மகஜர்களை அரச அதிபர் கையளித்தார்

கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் வெகுஜன அமைப்புக்களால் நடத்தப்பட்ட கண்டனப் பேரணிகளின் போது அரச அதிபரிடம் கையளிக்கப்பட்ட மகஜர்களை அவர் கொழும்பில் தங்கியிருந்தபோது ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தார்.

இம்மகஜர்களைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி அவற்றிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தம்மிடம் உறுதியளித்ததாக யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (47)

## பி. பி. ஸி. சிங்கள சேவை தகவல்:

## குடாநாடு மீதான தாக்குதல் மக்களின் பேச்சளவில் மட்டும்

யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என குடாநாட்டில் உள்ளவர்களே பேசிக்கொள்வதாக பி.பி.ஸி சிங்களசேவை நேற்றிரவு தெரிவித்தது

இதேவேளை படையினரும் யாழ்ப்பாணத்தைப் பிடிக்க வேண்டும் என்ற ஆவலில் இருப்பதாகவும் பி. பி. ஸி. கூறியது

இராணுவம் தாக்கினால் விடுதலைப்புலிகளும் பதிலடி கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது

## பல்கலை. இணைப்புக்கல்லூரி 7 ஆம் திகதி பயிற்சிகள் ஆரமபம்

வவுனியாவில் அமைக்கப்பட்டுள்ள வடமாகாண பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரியில் கணித விஞ்ஞான பயிற்சி நெறிகள் ஏழாம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக மேற்படி இணைப்புக்கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி த. மோகனதாஸ் அறிவித்துள்ளார்,

இப்பயிற்சி நெறிக்கு 55 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர், தெரிவான மாணவர்களின் விவரம் உள்ளே இரண்டாம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு மேலும் ஒரு ஜெனரேட்டர்

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் இவ்வாரத்தில் இரு ஜெனரேட்டர்கள் மூலம் மின்சாரம் வழங்கப்படவுள்ளது

இதற்கான வேலைகளில் கிளிநொச்சி மின்சாரசபை ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்:

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் தற்பொழுது ஒரு ஜெனரேட்டர் இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஜெனரேட்டர் கிளிநொச்சி வர்த்தக சங்கத்தால் அன்பளிப்புச்செய்யப்பட்டது. 17

## வடமராட்சி கிழக்கு அகதிகள் நோய்களினால் பாதிப்பு

வடமராட்சி கிழக்குப்பகுதியில் அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களின் பெரும்தொகையானோர் காய்ச்சல், சத்தி வயிற்றோட்டம் நோய்களினால் பீடிக்கப்பட்டுள்ளனர்

இப்பகுதியிலுள்ள மருதங்கேணி, அம்பன் கிராமியவைத்தியசாலைகளில் பிறிமாக்குயின், குளோறகுயின், பனடோல் போன்ற மருந்து வகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

வைத்தியசாலைக்குச் செல்லும்நோயாளர்களுக்குமருந்து எதுவும் இல்லையெனக் கூறப்படுகின்றது,

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையினரால் வாரம் ஒருமுறை நடாத்தப்படும் நடமாடும் வைத்திய சேவையில் நோயாளர் தொகை அதிகரிப்பதினாலும்மருந்து

—04 ஆம் பக்கம் பார்க்க

## வாழைச்சேனையில் 27 பேர் பலி

வாழைச்சேனையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் பலியான படையினரின் தொகை இருபத்தேழு என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

வடமாகாண இணைக்கப்பட்ட
பல்கலைக்கழக கல்லூரி
வடமாகாண
இணைக்கப்பட்ட
பல்கலைக்கழக

## கல்லூரி அனுமதி

பின்வரும் மாணவர்கள் வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரியின் கணித, விஞ்ஞான பயிற்சி நெறிக்கு அனுமதி பெற்றுள்ளார்கள், கல்லூரி 01 03 92 அன்று ஆரம்பமாகும்.

| | | |
|---|---|---|
| 01 | துஷ்யந்தன் என். | முள்ளியவளை |
| 02 | சிவநதனி எம் | கரவெட்டி |
| 03 | அமீன் எம் ஏ சி. | மன்னார் |
| 04 | சந்திர மௌளீசன், என். கே. | மீசாலை |
| 05 | மதிவதனா ஆர். | வேலணை |
| 06 | மகேஸ்வரன் ரி. | கரவெட்டி |
| 07 | பாஸ்கரன் கே. | யாழ்ப்பாணம் |
| 08 | மூகானந்தன் எஸ். எஸ். | கண்டி |
| 09 | சற்குணநாதன் எஸ். | யாழ்ப்பாணம் |
| 10 | மேரி திரேசா எஸ். | இளவாலை |
| 11 | சுதாகரன் எம். | கைதடி |
| 12 | குமாரன் வி. | தெல்லிப்பளை |
| 13 | பாஸ்கர் ஆர். | மட்டக்களப்பு |
| 14 | மதுரநாயகம் எம் பி, | இளவாலை |
| 15 | செந்தாமரைச்செல்வன் எம், | கரவெட்டி |
| 16 | நக்கீரன் எம், | குருக்கள் மடம் |
| 17 | சாந்தகுமார் கே, | அல்வாய் |
| 18 | சுந்தரசர்மா கே, | கைதடி |
| 19 | விக்னேஸ்வரன் எம், | ஆனைக்கோட்டை |
| 20 | சுகந்தன் ரீ, | கொழும்பு |
| 21 | ஜெயக்குமாரி எம், | மட்டக்களப்பு |
| 22 | கேசகுமாரி எம், | வல்வெட்டித்துறை |
| 23 | தெய்வேந்திரம் ஏ, ஈ, | கரவெட்டி |
| 24 | அருள்ராஜ் பி, | கொடிகாமம் |
| 25 | சிவயோகன் வி. | கொழும்பு |
| 26 | செந்தூரன் கே. | இளவாலை |
| 27 | அகிலேஸ்வரன் ரீ, | தெல்லிப்பளை |
| 28 | சசிகரன் எஸ, | பண்டத்தரிப்பு |
| 29 | ஜேசுதாஸ் எம், ஏ, | பண்டத்தரிப்பு |
| 30 | ரஞ்ஜினி பி. | தெல்லிப்பளை |
| 31 | சண்டேஸ்வரன் என். | சாவகச்சேரி |
| 32 | விக்னேஸ்வரன் ஜீ. | அச்சுவேலி |
| 33 | கணேசலிங்கம் என். | காரைநகர் |
| 34 | தர்மலிங்கம் எம். | வல்வெட்டித்துறை |
| 35 | சிவரதன் எம் | சுன்னாகம் |
| 36 | கன் பி. | பருத்தித்துறை |
| 37 | சிவனேந்திரன் ஐ. | கரவெட்டி |
| 38 | ஞானாம்பாள் எம். | சுழிபுரம் |
| 39 | ஞானம்பலம் ஏ. | வல்வெட்டித்துறை |
| 40 | சூசைப்பிள்ளை எம். ரீ | இளவாலை |
| 41 | இந்திரன் கே | கொக்குவில் |
| 42 | சுதேசன் சி. | யாழ்ப்பாணம் |
| 43 | சுதர்சன் ஏ. | அல்வாய் |
| 44 | சிவகுமார் எஸ. | கொழும்பு- 13 |
| 45 | குமாரன் வி, | தெல்லிப்பளை |
| 46 | சண்முகசுந்தரம் ஜெ, | வல்வெட்டித்துறை |
| 47 | ஜீவராணி வி, | கரவெட்டி |
| 48 | பகீரதன் என், | தெல்லிப்பளை |
| 49 | நித்தியானந்தம் ரி, | சாவகச்சேரி |
| 50 | அப்ருல்லா ஏ. | காவல்லா |
| 51 | பிரான்சிஸ் ஏ. | யாழ்ப்பாணம் |
| 52 | இராஜரூபி ரி, | மட்டக்களப்பு |
| 53 | கதிர்காமநாதன் ஆர். | மட்டக்களப்பு |
| 54 | புவனேஸ்வரி வி, | காரைநகர் |
| 55 | மகேஸ்வரன் எஸ | யாழ்ப்பாணம் |

மேற்படி மாணவர்கள் தங்களது வவுனியாவிற்கான பிரயாணம் சம்பந்தமாகவும், மேற்படி கல்லூரியில் பதிவுசெய்வது சம்பந்தமாகவும் கலந்து ஆலோசிக்க திங்கட்கிழமை 02-03-1992ஆம் திகதி சிவராத்திரி தினமன்று காலை 10 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் பதிவாளர் அலுவலகத்தில் பதிவாளரையும் இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரியின் பணிப் பாளரையும் சந்திக்கும் படி வேண்டப்படுகிறீர்கள்.

வவுனியாவில் புகையிரத வீதியில் அமைந்துள்ள வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழக கல்லூரியின் முதலாம் பயிற்சி நெறி ஆகிய கணித விஞ்ஞானம் 07 03-1992ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பேராசிரியர் அர்ச்சுனா அலுவிகார தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அவர்களினால் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப் படும். தவிர்க்க முடியாத காரணங்களினால் பணிப் பாளரை யாழ் பல்கலைக்கழகத்தில் 2ஆம் திகதி திங்களன்று சந்திக்க முடியாத மாணவர்கள் நேரடியாக வவுனியாவில் அமைந்துள்ள வடமாகாண இணைக்கப் பட்ட பல்கலைக்கழக கல்லூரிக்கு 7ஆம் திகதி வரும் படி அழைக்கப்படுகிறார்கள்.

சு. மோகனதாஸ்
பணிப்பாளர்- இ. ப. க
பதிவாளர் யா. ப.

03003

★ 22 ஆயிரம் துருப்புக்களைக் கொண்...
அமைதிப்படையை கம்போடியாவு...

# ஐ.நா.சபை ஏகமனதாக முடி...

கம்போடியாவுக்கு இப்பகுதி இரண்டாயிரம் துருப்புக்களை உள்ளடக்கிய அமைதிப் படையொன்றை அனுப்புவதற்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை நேற்று முன்தினம் ஏகமனதாக முடிவெடுத்துள்ளது.

பாதுகாப்புச் சபையின் உறுப்பினர்கள் கம்போடியாவுக்கு ஐ.நா. அமைதிப் படையை அனுப்பும் இம் முடிவை எடுத்தனர்.

ஐ.நா.வினால் அனுப்பப்படும் மிகவும் பெரிய அமைதிப் படையாக இந்த கம்போடியாவுக்கான அமைதிப் படை திகழவுள்ளது. அத்துடன் இப் படை கம்போடியாவில் ஐ.நா.வின் ஓர் இடைக்கால அதிகாரப் படையாகவும் அமையும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்போடியாவின் நிர்வாகம் என்பவற்றைப் பாதுகாத்தல், சட்ட விரோத ஆயுதங்களைக் களைதல் போன்ற கடமைகளுடன் தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்யும் ஒரு இடைக்கால படையாகவும் இது செயற்படும்.

கம்போடியாவில் ஐ.நா. அமைதிப்படை தங்கியிருக்கும் கால எல்லை ஒன்றரை வருடங்களாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தேச படை அணி நிர்வாகச் செலவு சுமார் இரண்டு மில்லியன் டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## மகா சிவராத்திரி விழா

### திருமுறைப் பாராயணம்

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் மகா சிவராத்திரி தினத்தில் நல்லூர் ஸ்ரீ சட்டநாத சுவாமி ஆலயம், வண்ணை சாத்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம், ஆத்திசூடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், திருவண்ணை நகர் ஸ்ரீ வைத்தீஸ்வரர் ஆலயம், நாயன்மார்கட்டு ஸ்ரீ பேச்சியம்பாள் ஆலயம், அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், அரியாலை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம் முதலிய ஆலயங்களில் திருமுறைப் பாராயணம் செய்யவுள்ளனர்.

### சரசாலையில்

சரசாலை இலந்தைத்திடல் வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழா நாளை சிறப்புற நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

இரவு நான்கு சாமமும் விசேட அபிஷேகம் பூசை என்பன இடம்பெறும். பல கலை நிகழ்ச்சிகள் ஆலய கூட்டுப் பிரார்த்தனைச் சபையினரின் அனுசரணையுடன் நடைபெற ஏற்பாடாகி உள்ளன.

### உரும்பராயில்

உரும்பராய் ஞானவைரவ சுவாமி ஆலயத்தில் மகா சிவராத்திரி தின நிகழ்ச்சிகள் நாளை திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி செவ்வாய்க்கிழமை காலை வரை நிகழும்.

### திருநெல்வேலியில்

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சேவா சமித்தி திருநெல்வேலி சேர் பொன் இராமநாதன் வீதியிலுள்ள தனது மண்டபத்தில் நாளை திங்கள் மாலை 5,45 மணி முதல் மகா சிவராத்திரி விசேட நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளது. (41)

### புதுக்குடியிருப்பில்

புதுக்குடியிருப்பு சிவன் ஆலயம், கந்தசுவாமி ஆலயம் ஆகியவற்றிலும் நாளை சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### கொக்குவிலில்

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் நாளை மாலை 6 மணி தொடக்கம் மகா சிவராத்திரி தின விசேட ஆராதனைகள் இடம்பெறும்.

அமெரிக்கா பாலஸ்தீனியர்களுக்கு

## ஆதரவு வழங்குகிறது இஸ்ரேல் குற்றச்சாட்டு

இஸ்ரேலின் கடனுதவி உத்தரவாதங்களுக்கு தடை விதித்ததன் மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் யூதர்களின் குடியிருப்பு விடயமாக பாலஸ்தீனியர்களுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்குவதாக இஸ்ரேலிய பிரதமர் ஷமீர் குற்றம் சாட்டியுள்ளார்.

குடியிருப்பு விடயமாக இஸ்ரேலை நெருக்கடி செய்வதற்காக மனிதாபிமான உதவியை அமெரிக்கா தனது சொந்த நலனுக்கும் பயன்படுத்துகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை
விஞ்ஞானபீட முதலாவது
அரையாண்டு

### பரீட்சை - 1991

1991 ஆண்டுக்குரிய முதலாவது அரையாண்டுப் பரீட்சை வருகிற (1992) ஏப்ரல் மாதம் நடைபெற உள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் 21 03. 92 இற்கு முன்பாக யாழ் பல்கலைக்கழகப்பரீட்சைக்கிளையில் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விபரங்களைப் பரீட்சைக் கிளைச் சிரேஷ்ட உதவிப்பதிவாளரிடமிருந்து நேரடியாகவோ அல்லது சுயவிலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23செ.மீ×10 செ.மீ அளவுடைய கடித உறையை அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

0 3002 பதிவாளர்

யாழ்ப்பாணம்

## தொழில்நுட்பக்கல்லூரி - 1992 ஆம் கல்வியாண்டு வகுப்புகள்

மேற்படி வகுப்புகள் 1992. 02. 24 ஆம் திகதி முதல் நடைபெறுகின்றன. 'ராகிங்' என்ற பெயரில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் அச்சமின்றி வகுப்புகளுக்கு வருவதற்காக 'ராகிங்' முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே அனுமதி கிடைத்த மாணவர்கள் யாவரையும் வகுப்புகளுக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தொடர்ந்து சமுகமளிக்கத் தவறுபவர்களின் அனுமதிகள் இரத்துச் செய்யப்பட்டு, அவர்களின் இடத்துக்கு விரைவில் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்பதனை அறியத்தருகிறேன்.

அதிபர்

03004


## "மில்க்வைற் நீல் சோப்"

மேலுறைகள் பத்து சேர்ப்பித்து
அறிவு வளர்த்திடும்




★ மில்க்வைற் செய்தி
★ ஆத்திசூடி
★ கொன்றை வேந்தன்
★ நல்வழி

இவற்றுள் ஒன்றை அன்பளிப்பாகப் பெறுங்கள்
" மில்க்வைற் "
யாழ்ப்பாணம்.

03001

Nallur Branch Library



## முன்னாள் சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவை பதவிநீக்க புரட்சி மேற்கொண்ட

# தலைவர்களை விடுவிக்க முயற்சி!

சென்ற ஆண்டு சோவியத்தில் முன்னாள் ஜனாதிபதி கொர்பச்சேவைக் கவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட திடீர்ப் புரட்சியில் ஈடுபட்ட தலைவர்கள் மீதான வழக்கு விசாரணையை ரத்துச்செய்யுமாறு ரஷ்ய இணைத் தலைவர் ஜெனரல் அலெக்ஸாண்டர் ருட்ஸ்கோய் கோரியிருக்கிறார்.

பழமை வாய்ந்த கம்யூனிஸ்ட்கள் எனக் கருதப்படும் தலைவர்களை விடுவிக்குமாறும் அவர் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் கேட்டுள்ளார்.

சோவியத்தின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர், உளவு விசாரணை அமைப்பின் முன்னாள் தலைவர், முன்னாள் பிரதமர், முன்னாள் துணை அதிபர் ஆகியோர் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்.

இவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகள் தற்பொழுது எடுக்கப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## 'இன்ரசிற்றி' ரயில் சேவையை மீண்டும் ஆரம்பிக்க ஆலோசனை

கொழும்பிலிருந்து வவுனியாவுக்கு மீண்டும் 'இன்ரசிற்றி' விசேட கடுகதி ரயில் சேவையை நடாத்துவதற்கும் புகையிரதப் பகுதி ஆலோசித்து வருவதாகப் போக்குவரத்து அமைச்சர் விஜயபால மெண்டிஸ் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவில் தெரிவித்தார்.

இதே வேளை கொழும்பு கோட்டைக்கும் வவுனியாவுக்குமிடையேயான இரவு ரயில் சேவை கடந்த வியாழக்கிழமை முதல் நடைபெற்று வருகின்றது.

## கோப்பாயில் கால்நடைகளுக்கு காய்ச்சல்நோய்; இதுவரைபலமரணம்!

கடந்த சில நாட்களாகக் கோப்பாய் மத்தியப் பகுதியில் திடீரெனப் பசுமாடுகள் இறந்து வருகின்றன. கறவை மாடுகளும், கன்று ஈனவுள்ள மாடுகளுமே இவ்வாறு இறக்கின்றன.

மாடுகளுக்குக் காய்ச்சல் நோய் ஏற்பட்டுள்ளதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவற்றிற்கு இறப்புடன் இரத்தமும் சேர்ந்து வருவதுடன் சிறுநீர் கழித்த இடம் பச்சை நிறமாக மாறுவதாகவும் கால்நடை வளர்ப்போர் தெரிவிக்கின்றனர். (35)

## பழுதடைந்த இழுவைப் படகை திருத்தும் வேலை ஆரம்பம்

பருத்தித்துறை துறைமுகத்தில் பழுதடைந்துள்ள இழுவைப் படகு (பாஜ்) களில் ஒன்று திருத்தப்பட்டு வருகிறது.

இங்குள்ள 5 இழுவைப் படகுகளில் இரண்டு பழுதடைந்து விட்டன. இவற்றில் ஒன்று திருத்தப்பட்டு வருகிறது. மற்றையது திருத்தப்படாமலேயே இருக்கின்றது.

ஏனைய மூன்று இழுவைப் படகுகளும் பொருள்கள் இறக்குவதற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. (10)

## கடும்வரட்சி; மின் உற்பத்திக்கு 1000 மில்லியன் மேலதிகச் செலவு

கடும் வரட்சி காரணமாக நீர் மின்விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதனால், மின் தேவையைச் சமாளிக்கும் வகையில் அனல் மற்றும் எரிபொருள் மின் நிலையங்களை மின்சாரசபை மீண்டும் தற்போது இயங்கச்செய்துள்ளது.

இதனால் மே மாதம்வரையும் மின்சாரசபைக்கு சுமார் 1000 மில்லியன் ரூபா மேலதிக எரிபொருள் செலவு ஏற்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மேலதிகச் செலவைச் சமாளிப்பதற்காக இலங்கை மின்சார சபை இன்று முதல் மின் பாவனையாளர்களிடமிருந்து எரிபொருள் கட்டணத்தையும், மின்கட்டணத்துடன் அறவிட முடிவெடுத்துள்ளது.

நீர் மின்விநியோகம் சீராகும்வரை இந்த மேலதிகக் கட்டணம் அறவிடப்படும்.

## விசா இன்றி இந்தியா செல்ல இவர்களுக்கு அனுமதி

தென்னாசிய ஒத்துழைப்புச் சங்க நாடுகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் இன்று முதல் இந்தியாவுக்கு விசா இன்றிச் சென்றுவர அனுமதிக்கப்படுவர் என இந்திய அரசு அறிவித்துள்ளது.

இவர்கள் மனைவியர்களுடனும் 18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுடனும் இந்த விசா இன்றி இந்தியப் பயணத்தை இவர்கள் மேற்கொள்ள முடியும்.

## செயலக அணி இன்று மோதும்

யாழ் செயலக கிரிக்கெட் அணிக்கும், மக்கள் வங்கி கிரிக்கெட் அணிக்கும் இடையேயான சிநேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டமொன்று இன்று முதலாம் திகதி காலை 9 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (04)

## நாடுதிரும்பிய ஊழியர்க்கு முன்னையஇடத்தில் மீண்டும் வேலை

தமிழகத்திலிருந்து நாடு திரும்பிய சகல அரச ஊழியர்களுக்கும் சம்பள நிலுவைகளுடன் மீண்டும் வேலை வழங்கப்படவேண்டுமென்ற அரசின் முடிவு பொது நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் சுற்றுநிருபமூலம் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பின்பிரகாரம் குறித்த ஊழியர் இந்தியாவுக்கு செல்வதற்கு முன்னர் கடமை புரிந்த அதே இடத்திலேயே அவருக்கு மீள் நியமனம் வழங்கப்படல் வேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளது.

சமயாசமய, தற்காலிக, மாற்று ஊழியர்களுக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும்.

## மறக்க முடியா அனுபவம் தந்த 'கொழும்பு மெயில்' ஆஸியில்!

அவுஸ்திரேலிய மெல்போர்ன் கலைவட்டம் 'கொழும்பு மெயில்' என்ற கதை இசை நிகழ்ச்சியொன்றை தயாரித்துள்ளது.

'காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு கொழும்புக் கோட்டையை நோக்கி முன்னர் தினமும் சேவையாற்றி வந்த மெயில் வண்டி இன்று இல்லை. இந்த மெயில் வண்டிப் பயணம் சுவாரஸ்யமானது. [illegible] பிடிப்பதிலிருந்து ஆரம்பமாகும் இந்த மெயில் ரயில் அனுபவங்களை வடபகுதித் தமிழர் இலகுவில் மறந்துவிட முடியாது. அந்தச் சுவாரஸ்யத்தை அனுபவிக்காதவர்கள் அபாக்கியசாலிகள் தான்' என்று இந்த 'கொழும்பு மெயில்' நிகழ்ச்சிக்கு முன்னுரை வழங்கப்பட்டுள்ளது.

முன்னர் சுவாரஸ்யமாக இருந்து பின்னர் பயங்கர பயணமாக மாறி மறக்கமுடியாத அனுபவங்களைத் தந்த இந்த 'கொழும்பு மெயில் பற்றிய மூலக்கதையை தற்பொழுது அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மாவை நித்தியானந்தன் எழுதியுள்ளார். உரும்பராயைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரபல பாடகர் நித்தி கனகரத்தினம் அதற்கு இசையமைத்துள்ளார். தற்பொழுது அவுஸ்திரேலியாவில் வசிக்கும் பல ஈழத் தமிழ்க்கலைஞர்கள் பங்குபற்றும் 'கொழும்பு மெயில்' ஒளிப்பதிவு செய்யப்பட்டு வீடியோ கசெற்றாகவும் வெளியிடப்படவுள்ளது.

## நிலவாயு அழுத்தத்தில் ஓடும் பஸ்சேவை தமிழகத்தில் அறிமுகம்

திரவ எரிபொருளின்றி நிலவாயு அழுத்தத்தினால் ஓடக்கூடிய பஸ்சேவையொன்று நேற்று முன்தினம் தமிழகத்தில் தமிழக முதல்வரினால் பரீட்சார்த்தமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழக மாநில அரசுக்குச் சொந்தமான 'சோழன்' போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த 10 பஸ்வண்டிகள் முதற்கட்டமாக இந்த நிலவாயு அழுத்த எரிபொருள் முறைக்கு மாற்றப்பட்டுள்ளன.

திரவ எரிபொருள் முறையிலிருந்து நிலவாயு அழுத்தத்திற்கு மாற்றுவதற்கு ஒவ்வொரு பஸ் வண்டிக்கும் 80 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டுக்குள் 1000 பஸ்வண்டிகளும் பின்னர் 10 ஆயிரம் பஸ் வண்டிகளும் இந்த முறைக்கு தமிழகத்தில் மாற்றப்படவுள்ளன.

திருவாரூர் - நாகபட்டினம் மார்க்கத்தில் இவை சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

## குற்றவாளிகளைப் பரிமாற பிரிட்டன்-இந்தியா இணக்கம்!

வெளிநாட்டில் போய்த் தங்கியிருக்கும் குற்றவாளிகளை விசாரணைக்காக அவர்களது சொந்த நாட்டுக்கே ஒப்படைப்பது, போதைவஸ்து விற்பனை மற்றும் முறைகேடான நடவடிக்கைகள் மூலம் சேகரிக்கப்படும் பணத்தை பறிமுதல் செய்வது தொடர்பான இரண்டு ஒப்பந்தங்களில் இந்தியாவும் - பிரிட்டனும் கைச்சாத்திட்டுள்ளன.

லண்டனில் நான்கு நாள் நடைபெற்ற இந்திய-பிரிட்டன் அதிகாரிகள் உயர்மட்டப் பேச்சின் போது இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

குற்றவாளிகளை அவர்களது நாட்டுக்கே அனுப்பி வைப்பதான இவ் ஒப்பந்தம் பிரிட்டனுக்கும், இன்னொரு காமன்வெல்த் நாட்டுக்குமிடையேயான முதலாவது ஒப்பந்தமாகும்.

## தென் ஆபிரிக்க கருத்துக் கணிப்பில் 30லட்சம்வெள்ளையர் பங்குபற்றுவர்

தென் ஆபிரிக்காவில் இனப் பாகுபாட்டுப் பிரச்சினை குறித்து இம்மாதம் 17 ஆம் திகதி நடைபெற விருக்கும் கருத்துக்கணிப்பில் சுமார் 30 லட்சம் வெள்ளையர்கள் வாக்களிப்பர்.

இனப்பாகுபாட்டை அகற்றுவதற்கான முயற்சியில் ஈடுபடும் தென் ஆபிரிக்கத் தலைவர் கிளார்க்கின் நிலையை இக் கருத்துக் கணிப்புத் தீர்மானிக்கும்.

கருத்துக்கணிப்பில் தோல்வியடைந்தால் தான் பதவி விலகப் போவதாக அவர் அறிவித்துள்ளார்.

வெள்ளையர்களுக்கு மட்டுமான இக் கருத்துக் கணிப்பை ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் எதிர்த்துவருகிறது. ஆனால் ஆதரவாக வாக்களிக்குமாறு அந்த ஸ்தாபனம் வெள்ளையர்களைக் கேட்டுக்கொண்டது.

## சாரதிகளுக்குப் பயிற்சி வழங்க அரசு பாடசாலை அமைக்கும்!

அரசாங்கம் விரைவில் சாரதியப் பயிற்சிப் பாடசாலையொன்றைத் தொடங்கி ஆரம்பிக்கவுள்ளது.

தற்பொழுது தனியார் நிறுவனங்களினால் வழங்கப்படும் சாரதியப் பயிற்சி போதுமானதாக இல்லாமையே விபத்துக்கள் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமென வாகனப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவு செய்த முறைப்பாட்டையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தகுதியற்ற வாகனங்களைச் சேவையிலிருந்து ஒதுக்குவதற்காக வாகனப் பரிசோதனை நிலையமொன்றும் அரசினால் நிறுவப்படவுள்ளது.

## புதிய நியமனங்கள்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகப் பணிப்பாளராக வீ. ஏ. திருஞானசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அறிவிப்பாளரான இவர் தமிழ்ச் சேவைப் பணிப்பாளராகவும் சில வருடங்கள் பணிபுரிந்திருந்தார்.

தமிழ்ச் சேவையின் புதிய பணிப்பாளராக முன்னாள் அறிவிப்பாளரான என். சிவராஜா பதவியேற்றுள்ளார்.

## உள்ளூர் உற்பத்திகளின் காட்சி

யாழ் மகளிர் அபிவிருத்தி நிலையம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் 7ஆம் 8ஆம் திகதிகளில் உள்ளூர் உற்பத்திகளின் பொருட்காட்சி ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது.

போர்க்காலச்சூழ்நிலையில், சுய உற்பத்திப் பொருட்களுக்கு ஊக்கமளித்தல், மக்களிடையே அவற்றினை அறிமுகப்படுத்தல், சந்தை வாய்ப்பினைப் பெற்றுக் கொடுத்தல் ஆகியவையே, மேற்படி பொருட்காட்சியின் நோக்கங்களாகும்.

இப்பொருட்காட்சியில் தமது உற்பத்திப் பொருள்களை அறிமுகப்படுத்த விரும்பும் உள்ளூர் உற்பத்தியாளர் யாழ் மகளிர் அபிவிருத்தி நிலையத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## கூட்டுறவு முறையில் வாடகைக்கார் சேவை

கூட்டுறவு முறையில் வாடகைக்கார் சேவையொன்று விரைவில் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் நாடு முழுவதும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இப்புதிய திட்டத்தின் கீழ் கூட்டுறவுத் திணைக்களம் வாடகைக்கார், ஓட்டோ என்பனவற்றைக் கொள்வனவு செய்து அவற்றை ஜனசக்தி உதவி பெறுவோரின் மூலம் வாடகைக்கு விடும்.

ஜனசக்தி உதவி பெறுவோர் இந்த வாகனங்களின் தற்காலிக உரிமையாளர்களாக முதலில் மதிக்கப்படுவர். இதற்காக அவர்கள் கணிசமான தொகையை வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும். இதற்கு வங்கிக் கடன் ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்.

பின்னர் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் அந்த வாகனங்கள் அவர்களுக்கு சொந்தமாக்கப்படும்.

இதன் கீழான முதலாவது வாடகைக்கார் சேவை எதிர்வரும் ஜூன் மாதம் கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இத்தொகுதி 50 வாகனங்களைக்கொண்டதாகஇருக்கும்.

யாழ் மாவட்டம் உட்பட

# கிராமசேவையாளர் வெற்றிட போட்டிப் பரீட்சை ஏப். 23 இல்

கிராமசேவையாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை நாடு பூராகவும் ஒரே தினத்தில் நடத்துவதற்கு பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான போட்டிப் பரீட்சை ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது. விண்ணப்பங்கள் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே யாழ் மாவட்டத்தில் உள்ள வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டு விண்ணப்பித்தவர்களும் திரும்ப விண்ணப்பிக்கவேண்டிய நிலை ஏற்படலாமெனவும் தெரியவருகிறது.

விண்ணப்பிக்கும்போது ஏற்கனவே நூறு ரூபா செலுத்தி விண்ணப்பித்தவர்கள் திரும்பச் செலுத்த வேண்டிய நிலை ஏற்படாது என்றும் செயலக வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. (06)

# மந்திகை ஆஸ்பத்திரிக்கு விசர் நாய் தடுப்பூசி மருந்துகள்

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு விசர் நாய்க் கடி தடுப்பூசி மருந்துகள் (ஏ ஆர் வீ) வந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கு முன்னர் பிரான்ஸில் தயாரிக்கப்பட்ட விசர் நாய்க் கடி தடுப்பூசி மருந்துகள் இங்கு கொண்டுவரப்பட்டன.

பிரான்ஸில் தயாரிக்கப்பட்ட மருந்தின் பெறுமதி 3000 ரூபா எனவும் தெரிவிக்கப்படுகிறது. (11)

# சவூதி அரேபியாவுக்கு அமெரிக்க யுத்த விமானங்கள்

சவூதி அரேபியா 500 கோடி டொலர் (சுமார் 2400 கோடி ரூபா) பெறுமதியான எப்-15 ரக யுத்த விமானங்களை அமெரிக்காவிடமிருந்து வாங்கவுள்ளது.

வளைகுடா நாடுகளுக்கு 1200 கோடி டொலர் பெறுமதியான ஏவுகணைகள் உட்பட உயர்ரக யுத்த தளபாடங்களை விற்பனை செய்ய அமெரிக்க ஜனாதிபதி புஷ் காங்கிரஸுக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்துள்ளார். 06

# குழந்தைகளுக்கு பொம்மைகள் அனுப்பவும் தடை

ஈராக் குழந்தைகளுக்கு அமெரிக்காவிலிருந்து 2000 பொம்மைகளை அனுப்பப் போவதை அமெரிக்க சுங்கப் பகுதியினர் தடுத்து வைத்துள்ளனர்.

ஈராக்கிலுள்ள தர்ம நிறுவனம் ஒன்றுக்கு அமெரிக்க குழந்தைகளின் சார்பில் இப்பொம்மைகள் சேகரிக்கப்பட்டிருந்தன. இவற்றை அனுப்புவது ஈராக் மீது விதிக்கப்பட்டிருக்கும் வர்த்தகத் தடையை மீறுவதாகும் என்று சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை ஈராக்கிற்கு பொம்மைகளை அனுப்புவற்கு விய நாமுக்குத் தடைவிதித்த ஐ.நா.சபை அமெரிக்காவிலிருந்து ஈராக்கிற்கு கரடி பொம்மைகள் அனுப்புவதற்கும் தடைவிதித்தது

## கூட்டணி எம். பி. நீக்கம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பட்டியலின் மூலம் யாழ் மாவட்ட உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள கணபதிப்பிள்ளை ஸ்ரீநிவாசன் என்பவரை தமது அணியிலிருந்து நீக்கியுள்ளதாக ஈழத்தேசிய ஜனநாயக முன்னணி அறிவித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

★ கடந்த இருமாதங்களில் மட்டும்

# 500 க்கும் மேற்பட்டோர் நாய் கடித்து சிகிச்சை

யாழ் மாவட்டத்தில் கடந்த இரு மாத காலப்பகுதிகளில் ஐந்நூறுக்கு மேற்பட்டோர் நாய்க்கடிக்குள்ளாகியிருக்கின்றனர் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனவரி மாதத்தில் 249 பேரும் பெப்ரவரி மாதத்தில் 222 பேரும் நாய்க்கடிக்கு ஆளாகியுள்ளனர்.

ஜனவரி மாதத்தில் விசர் நாய்க் கடிக்குள்ளானவர்களில் 20 பேர் அடங்குவர். ஆனால் ஜனவரி மாதத்தைவிட பெப்ரவரி மாதத்தில் 53 பேர் விசர் நாய்க்கடியினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு மாதத்திலும் 73 பேர் விசர் நாய்க் கடியினால் பாதிக்கப்பட்டு விசர் நாய் தடுப்பூசி மருந்தினைப் பெற்றுள்ளனர்.

25 க்கு மேற்பட்டோர் கடும் காயங்களுக்குள்ளாகி விடுதிகளிலும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

யாழ் மாவட்டத்திலுள்ள ஏனைய மருத்துவ மனைகளிலும் கடந்த இரண்டு மாத காலப்பகுதியில் 15 க்கு மேற்பட்டோர் நாய்க்கடியினால் சிகிச்சை பெற்றனர்.

## 1 கோடி ரூபா ஒதுக்கீடு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியின் கீழ் 1 கோடி ரூபா யாழ் செயலகத்துக்கு இவ்வாண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. 04, 06, 47

வடமராட்சி...

குறைவாக உள்ளமையினாலும் அனைவருக்கும் சிகிச்சை அளிக்க முடியாத நிலையில் தடுமாறும் பிரிவினர் உள்ளனர்.

யாழ்ப்பாணம் சுகாதாரத் திணைக்களத்திற்கு இவ்வருட முதலாவது காலாண்டுக்கான மருந்துவகைகள் வந்து மற்றைய வைத்தியசாலைகளுக்கு மருந்து விநியோகம் நடைபெறுகின்றபோதிலும் வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை, அம்பன் மத்திய மருந்தகம் ஆகியவற்றிற்கு மருந்து வகைகள் நேற்று முன்தினம் வரை விநியோகிக்கப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. 27

# ஒரு மாத காலத்தில் 130க்கு மேல் படையினர் பலி

கடந்த ஒரு மாத காலத்தில் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி 130 க்கும் மேற்பட்ட படையினர் பலியானதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒன்பது பாரிய தாக்குதல்கள் புலிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், பல நவீன ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஏவுகணைத் தளபாடங்களை அழிக்க ஈராக் மறுப்பு

ஈராக்கிலுள்ள ஏவுகணைகளைத் தயாரிக்கும் இராணுவத் தளபாடங்களை அழித்துவிடுவதற்கு நேற்று முன்தினம் வரையிலான ஐ.நா. விதித்த காலக்கெடுவை ஈராக் ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து ஐ.நா.வின் ஏவாயுத நிபுணர் குழு ஈராக்கிலிருந்து திரும்ப அழைக்கப்படுகிறது.

ஈராக்கில் இராணுவத் தளபாடங்கள் வைத்துள்ள இடங்களை கடந்த ஒருவாரமாக மேற்பார்வை செய்தனர்.

பக்தாத்தைச் சுற்றி வைத்திருக்கும் இத் தளபாடங்கள் ஐ.நா. நிபுணர் குழு முன்னிலையிலேயே அழிக்கப்பட வேண்டும் என ஐ.நா. தெரிவித்திருந்தது.

இந்த இராணுவ அமைப்புகள் அமைதிப் பணிக்கும் பயன்படுத்தப்படும் என ஈராக் தெரிவித்ததை மேற்படி குழு நிராகரித்தது. வளைகுடாப் போர் நிறுத்தத்தை ஈராக் மீறுமேயானால் கடுமையான விளைவுகளைச் சந்திக்கவேண்டி வரும் என ஐ.நா. பாதுகாப்புச் சபை எச்சரித்துள்ளது.

உலகக்...

துடுப்பாட்டத்தில் 39.3 ஓவர்களில் 3 விக்கெற்றுகள் இழப்பிற்கு 191 ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ்திரேலியாவில் பிறிஸ்போனில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியதீவுகள் அணி 50 ஓவர்களில் 8 விக்கெற்றுகள் இழப்பிற்கு 264 ஓட்டங்களைப் பெற்றது.

சிம்பாவே அணி அதன்துடுப்பாட்டத்தில் 50 ஓவர்களில் 7 விக்கெற்றுகள் இழப்பிற்கு 189 ஓட்டங்களை மாத்திரமே பெற்றதினால் தோல்வியுற்றது. 16

## பிரிட்டிஷ் விஜயம்

சீன வெளியுறவு அமைச்சர் சியாங்சென் அடுத்த மாதம் பிரிட்டனுக்கு செல்வார்.

1989 - ஆம் ஆண்டு சீனாவின் டியன் - மென் - சதுக்கத்தில் இடம் பெற்ற ஜனநாயக கிளர்ச்சி அடக்கப்பட்டதன் பின்னர் சீன அமைச்சர் ஒருவர் பிரிட்டனுக்குச் செல்வது இதுவே முதற் தடவையாகும்.

1997 - ஆம் ஆண்டு சீனாவின் நிர்வாகத்துக்குள் வரவிருக்கும் ஹொங்கொங்பற்றி ஆண்டுக்கு இரு தடவை இருநாடுகளும் கலந்து பேச வேண்டுமென்ற ஏற்பாட்டின் அடிப்படையிலேயே சீன அமைச்சர் பிரிட்டனுக்குச் செல்கிறார்.

இவர் ஜேர்மனுக்கும், பிரான்சுக்கும் செல்வார் எனவும் தெரிவிக்கப்பட்டது.


## வடமாகாண மக்களுக்கான தொலைத் தொடர்புகள்

வெளிநாட்டில் தொழில் புரியும் இலங்கையர்கள், வடமாகாணத்திலுள்ள தமது உறவினர்களுக்கு அனுப்பும் அவசர கடிதங்கள் தகவல்களை வவுனியாவுக்கு FAX மூலம் நேரடியாக இப்போது அனுப்பிவைக்கலாம்.

72 மணித்தியாலங்களில் அவற்றை உரியவர்களுக்கு விநியோகம் செய்வதற்கு

### வவுனியா மிதுஷா கொம்யூனிக்கேஷன்ஸ்

வசதி செய்துள்ளது.

நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய FAX இலக்கம் 94 - 024 - 2033 "METUCOM" VAVUNIYA

உலகின் எந்த நாட்டிலிருந்தும் வவுனியா மிதுஷா கொம்யூனிகேஷனுடன் FAX மூலமோ அல்லது நேரடித் தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்ளலாம்,

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களுக்கான FAX விநியோக சேவை விசேட கட்டணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

★ இரவு - பகல் 24 மணி நேர சேவை

★ வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்பை எதிர்பார்த்து இருப்பவர்களுக்குப் பாதுகாப்பான சூழலில் தங்குமிடம் இலவசம்

வெளிநாட்டு - உள்நாட்டு சகல தொலைத் தொடர்புச் சேவைகளுக்கும் இன்றே நாடுங்கள்

### மிதுஷா கொம்யூனிக்கேஷன்ஸ்

முதலாம் மாடி
இல 58, 59, புதிய பேருந்து நிலையக் கட்டிடம்,
வவுனியா.

தொலைபேசி - 024/2053
024/2033
FAX - 'Metucom' - 94-024-2033
Vavuniya

03005


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் காழகல்விளைக்காடு டச்சுவீதி 'லஷ்மிபில்டிங்'கில் உள்ள அச்சகத்தில் 01-03-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது